**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 303/2021**
**வழக்கு சாட்சி PW-2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கோபாலகிருஷ்ணன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | முருகன் | தொழில் | : | வழக்கறிஞர் |
| கிராமம் | : | சிவலார்குளம் | வயது | : | 52 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Wednesday of 18.02.2026.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் சிவலார்குளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் வழக்கறிஞராக பணி செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் உள்ளூர்க்காரர்கள். நான் வழக்கமாக எனக்கு சொந்தமான TNT-3539 என்ற பதிவெண் கொண்ட அம்பாசிடர் காரை எனது வீட்டிற்கு முன்பு நிறுத்தியிருப்பது வழக்கம். 30.08.2012 ம் தேதி, அதிகாலை 03.00 மணியளவில் மேற்படி ஆஜர் எதிரிகளும், இளவர் நவீனும் சேர்ந்து எனது காரின் பின்பக்க கண்ணாடியை கல்லால் உடைத்து சேதபடுத்தினார்கள். காரில் இருந்த பேட்டரியையும் எடுத்து சென்றார்கள். கண்ணாடி உடைக்கும் சத்தம் கேட்டு எனது சித்தி நிரைஞ்சாள் மேற்படி எதிரிகளை பார்க்கும்போது, எதிரிகள் எனது காரை உடைத்து கொண்டிருந்துள்ளார்கள். என்னுடைய சித்தி என்னிடம் இந்த தகவலை தெரிவித்தார். நான் உடனே சென்று பார்த்தபோது, எதிரிகள் 4 பேரும் அங்கில்லை. என்னுடைய காரின்

பின்பக்க கண்ணாடி சேதமடைந்திருந்தது. பேட்டரியையும் எடுத்து சென்று விட்டிருந்தார்கள்.

ஏற்கனவே, 1ம் எதிரி 2012ம் ஆண்டில் என்னையும், என்னுடைய சித்தி மகன் நீலவண்ணக்கண்ணனையும் கொலை செய்ய முயற்சி செய்தார். இது சம்பந்தமாக ஆலங்குளம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து ஆலங்குளம் காவல்நிலைய குற்ற எண்.69/2012 என வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்தது. அந்த வழக்கை வாபஸ் வாங்கச் சொல்லி எதிரிகள் மிரட்டி கொண்டிருந்தார்கள். அதற்கு நான் உடன்படாததினால் இவ்வாறு எதிரிகள் செய்தார்கள்.

எதிரிகள் உடைத்த கண்ணாடியின் சேதமதிப்பு ரூ.2000/- பெறும், பேட்டரி ரூ.1000/- மதிப்பு பெறும். இது சம்பந்தமாக நான் ஆலங்குளம் காவல்நிலையத்தில் புகார் மனு கொடுத்தேன். அந்த புகார் மனு என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது அ.சா.ஆ.1 ஆகும். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1, 2 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

என்னுடைய வீடு சிவலார்குளத்தில் ஐ.ஓ.பி தெருவில் உள்ளது என்றால் அதனை அம்மன்கோவில் தெரு என்றும் சொல்வார்கள். அந்த தெருவில் 2 பக்கங்களிலும் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். சம்பவத்தில் குறித்து அக்கம், பக்கத்தில் உள்ள நபர்களுக்கு தெரியும் என்று போலீசாரிடம் சொல்லவில்லை என்றால் எனது வீட்டிற்கு எதிரே தோட்டம் தான் உள்ளது. ஏற்கனவே உள்ள வழக்கை குறித்து நான் போலீசார் விசாரணையிலும், புகாரிலும் கூறவில்லை என்றால் புகாரில் கூறவில்லை. விசாரணையில் பகை உள்ளது என்று கூறியுள்ளேன். நான் குறிப்பிட்டு இந்த வழக்கை குறித்து சொல்லவில்லை.

சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். என்னுடைய கார் நின்ற இடத்திற்கு அருகில் இரவு நேரத்தில் எரியும் மின்விளக்குகள் இருந்ததாக போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் எனக்கு ஞாபகமில்லை. என்னுடைய சேதமடைந்த காரை புகைப்படம் எடுத்து காவல்நிலையத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். காரின் ஆர்.சி.புக்கை போலீசாரிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான், அவர்கள் கேட்கவில்லை. என்னிடம் மேற்குறிப்பிட்ட கார் இல்லை என்பதினால் தான் நான் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல.

நான் 1ம் எதிரி மீது தாக்கல் செய்த முந்தைய வழக்கிலிருந்து எதிரி விடுவிக்கப்பட்டார் என்றால் சரிதான். முதல் மேல்முறையீட்டு வழக்கிலும் அவர் விடுவிக்கப்பட்டார் என்றால் சரிதான். நான் சீராய்வு மனு உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். நான் விசாரணை நீதிமன்ற நீதிபதி மீது குற்றச்சாட்டுக்கள் குறிப்பிட்டு அந்த வழக்கை வள்ளியூர் நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்தேன் என்றால் நான் நீதிபதி மீது குற்றம் சாட்டவில்லை. நான் எழுத்து மூலமான வாத உரை சமர்ப்பிக்க வேண்டும் என கூறினேன். அதனை நீதிபதி ஏற்கவில்லை. நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

என் மீது சண்முகம் மனைவி ஐயம்மாள் என்பவரை கொலை செய்ததாக ஒரு வழக்கு இருந்தது என்றால் அது பொய் வழக்கு. அதிலிருந்து நான் விடுவிக்கப்பட்டேன். என் மீது கந்து வட்டி வழக்கு ஆலங்குளம் காவல்நிலையத்தில் இருந்தது என்றால் அது பொய் வழக்கு என்பதினால், காவல்துறையினர் என்னுடைய பெயரை நீக்கம் செய்து

இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள். இந்த சம்பவம் நடந்தவுடன் நான் காவல்நிலையத்திற்கு ஏன் தகவல் சொல்லவில்லை என்றால் ஊரில் உள்ள பெரியவர்களிடம் பேசி சுமூகமாக முடிக்கலாம் என்று நினைத்தேன். என்னுடைய பேட்டரி மறுநாள் கிடைத்ததாக நான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா? என்றால் சொல்லியுள்ளேன்.

நான் சொன்ன நாள், சொன்ன நேரத்தில், சொன்ன முறையில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், புகார் மனு கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. அவ்வாறு ஒரு சம்பவம் நடந்திருந்தால் நான் புகாரில் சம்பவத்தை பார்த்த சாட்சிகளை குறிப்பிட்டிருந்திருப்பேன் என்றால் சரியல்ல.

<u>**3 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**</u> -

(1, 2 ம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையானது, 3 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. )

நான் புகார் கொடுப்பதற்கு ஏற்பட்ட கால தாமதம் குறித்து புகாரில் குறிப்பிடவில்லை. போலீசார் விசாரணையில் கூறியுள்ளேன். காரின் பேனட் திறந்து கிடந்ததாக போலீசார் விசாரணையிலும், புகார் மனுவிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எனது சித்தி நிரைஞ்சாள் லைட் வெளிச்சத்தில் எதிரிகளை பார்த்தாக என்னிடம் சொன்னதாக புகாரில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். வழக்கமாக வீட்டிற்கு வெளியே லைட் போட்டிருப்பேன். இந்த விபரத்தை போலீசார் விசாரணையிலும், புகார் மனுவிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். என்னுடைய வீடு காம்பவுண்ட் சுவர் போடப்பட்டது என்றால் சரியல்ல. வீட்டிற்கு எதிரேயுள்ள தோட்டத்திற்கு முன்பு சம்பவம் நடந்ததாக புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் என்னுடைய வீட்டிற்கு முன்பு சம்பவம் நடந்ததாக கூறியுள்ளேன்.

**மறுவிசாரணை –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.19 19:10:50 +0530